**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI</u>**

O.S. No.34 of 2023

Deposition of P.W.2

Name of the Witness: திருமதி.குமுதா

Date : 22.04.2025

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை சாரதா போட்டு இருக்கிறார். இந்த வழக்கில் எத்தனை வாதிகள் என்று எனக்கு தெரியாது. சாரதாவை எனக்கு தெரியாது. போன வாய்தாவில் தான் நான் அவரை நீதிமன்றத்தில் பார்த்தேன். சாரதாவின் மகள் மெர்சியை நான் பார்த்துள்ளேன். காந்தி என்னுடைய அக்கா மகன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருக்கும் நபர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை. அந்த புகைப்படத்தில் இருப்பவர் தான் காந்தி என்றால் அதில் இருப்பவர் காந்தி கிடையாது. காந்தியின் அப்பா பெயர் ராஜா. ராசுவின் மகன் காந்திக்கும், சுமதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

2) சாரதாவின் கணவர் காந்தி சுகர்மில்லில் வேலை செய்தாரா என்று எனக்கு தெரியாது. ஆனால் எனது அக்காவின் மகன் காந்தி சுகர்மில்லில் தான் வேலை செய்தார். சாரதா கொடுத்த மனுவின் பேரில் என் மருமகள் சுமதிக்கு எந்த இறப்பு பயன்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சுமதி காந்தியின்

சட்டப்படியான மனைவி என்றாலும ் அவருக்கு காந்தியின் இறப்பு பயன்கள் எதுவும் கிடைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல. காந்திக்கும், சுமதிக்கும் பெரிய அளவில் திருமணம் நடந்தது. ராசு மகன் காந்திக்கும், சுமதிக்கும் திருமணம் நடக்கவில்லை என்றாலும் அவர்களுக்கு குழந்தையே இல்லை என்றால் சரியல்ல. சாரதா தான் காந்தியின் சட்டப்படியான மனைவி என்றாலும் மெர்சி காந்தியின் மகள் என்றாலும் அவருக்கு தான் பண பயன்கள் சேர வேண்டும் என்றால் சரியல்ல. சாரதாவிற்கும் மெர்சிக்கும் பண பயன்கள் கிடைக்க கூடாது என்பதற்காக சுமதியுடன் சேர்ந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.